

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 19-08-2024


# பழனிசாமி பேசலாமா?

திடீரென்று 'நீட்' தேர்வு எதிர்ப்புப் போராளியாக மாறி இருக்கிறார் அ.தி.மு.க.வின் ஒரு பிரிவு பொதுச்செயலாளரான பழனிசாமி!

'நீட்' தேர்வு தோல்வி காரணமாக தனுஷ் என்ற மாணவர் தஞ்சையில் தற்கொலை செய்து கொண்ட சோகம் இரண்டு நாட்களுக்கு முன் அரங்கேறியது. இதைப் பார்த்ததும் பழனிசாமிக்கு யார் மீது கோபம் வர வேண்டும்? 'நீட்' தேர்வை நடத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மீது கோபம் வந்திருக்க வேண்டும். ஆனால் பயந்த பழனிசாமி, தி.மு.க. மீது பாய்கிறார். 'இன்னும் எத்தனை மாணவர்கள் பலியாக வேண்டும்' என்று பம்மாத்து காட்டுகிறார்.

'நீட்' தேர்வை தி.மு.க. அரசு நடத்தவில்லை என்று கூட இந்தத் தற்குறி தலைவருக்கு தெரியவில்லை.

அனிதா, பிரதீபா, சுபஸ்ரீ, ஏஞ்சலின், வைசியஸ்ரீ, ரிதுஸ்ரீ, மோனிஷா, கீர்த்தனா, ஹரிஷ்மா, ஜோதிஸ்ரீதுர்க்கா, ஆதித்யா, மோதிலால், விக்னேஷ், சுபஸ்ரீ ஆகிய 14 மாணவச் செல்வங்கள் 'நீட்' தேர்வுக் கொடுமையால் தற்கொலை செய்து கொண்டது எல்லாம் பழனிசாமி ஆட்சியில்தான்!

தூத்துக்குடியில் 13 உயிர்களை துப்பாக்கியால் சுடும்போது அதை டி.வி.யில் பார்த்து ரசித்துக் கொண்டிருந்ததும், நீட் தேர்வுக்காக 14 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டிருந்ததை வேடிக்கை பார்த்ததும் பழனிசாமியின் இரக்கமற்ற குணத்துக்குச் சாட்சியங்கள் ஆகும்.

**"நீட் தேர்வு விலக்கு என்ற பேச்சுக்கு இடமில்லை. அனைவரும் எழுதி தான் ஆக வேண்டும். அதில் எந்த சந்தேகமும் வேண்டாம். நீட் தேர்வை பொறுத்தவரையில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது" என சொன்னது அன்றைய முதலமைச்சர் பழனிசாமி.**

**மருத்துவத் துறையை கவனித்து வந்த இந்திய மருத்துவக் கவுன்சிலை கலைத்துவிட்டு, தேசிய மருத்துவ ஆணையம் கொண்டு வர 2019 ஆம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணைய மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது மோடி அரசு. தேசிய மருத்துவ ஆணையம் மூலம்தான் 'நீட்' தகுதி தேர்வும், மருத்துவ மேல் படிப்பிற்கான நெக்ஸ்ட் தேர்வும் நடத்தப்படும். இந்த தேசிய மருத்துவ ஆணைய மசோதா 2019 ஆகஸ்ட் மாதம் மக்களவையில் நிறைவேறியது. அதன்பிறகு மாநிலங்களவையில் கொண்டு வரப்பட்ட போது, அ.தி.மு.க. எம்.பி நவநீத கிருஷ்ணன், "இந்த மசோதா நீட், நெக்ஸ்ட் தேர்வுகளுக்கு பலம் சேர்ப்பதால் ஆதரிக்க முடியாது" என்று சொன்னார். மசோதவை எதிர்த்த அ.தி.மு.க. என்ன செய்திருக்க வேண்டும்? மசோதவிற்கு எதிராக வாக்களித்திருக்க வேண்டும் அல்லவா! ஆனால், வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் மாநிலங்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தது. அதாவது மசோதா நிறைவேற மறைமுகமாக அ.தி.மு.க. ஆதரவு அளித்தது. அன்றைக்கு தன்னுடைய ஆட்சியை காப்பாற்றிக் கொள்ள அப்படியோரு நாடகத்தை நடத்தினார்கள். அவர் தான் இன்று வாய்நீளம் காட்டுகிறார்.**

'நீட்' முதல் தேர்வு 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் வந்தது. அப்போது ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்தது. பா.ஜ.க. மாநிலத்தை ஆளுகிறது அ.தி.மு.க. இதுவாவது பழனிசாமிக்கு தெரியுமா?

**இப்படி ஒரு தேர்வு தேவை என்று இந்திய மருத்துவக் கவுன்சில் 2010 ஆம் ஆண்டு சொன்னபோது - உச்சநீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அப்போதே உச்சநீதிமன்றம் இந்தத் தேர்வுக்கு தடை போட்டு விட்டது. அதனால் இந்தத் தேர்வு வரவில்லை. 2014 ஆம் ஆண்டோடு இந்திய ஆட்சிப் பொறுப்பில் இருந்து காங்கிரஸ் கட்சி இறங்கிவிட்டது. அதுவரை இந்த தகுதித் தேர்வு வரவில்லை. தமிழகத்தில் 2011 ஆம் ஆண்டுடன் தி.மு.க. ஆட்சி நிறைவுற்றது. அதுவரை இந்தத் தகுதித் தேர்வு வரவில்லை. 2011 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி தொடங்குகிறது. 2014 ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வருகிறது. அதற்குப் பிறகு தான் 'நீட்' தேர்வு வருகிறது. அப்படியானால் நீட் தேர்வுக்கு பொறுப்பேற்க வேண்டியது பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும்தானே. இத்தனை உயிர்கள் பலியானதற்கு இந்த இரண்டு கட்சிகளும் தானே காரணம்?**

'நீட் தேர்வு செல்லாது' என்று உச்சநீதிமன்றம் 18.7.2013 அன்று தீர்ப்பளித்தது. நீட் தேர்வுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றது 'சங்கல்ப்' என்ற தனியார் பயிற்சி நிறுவனம். தடையை நீக்க வாதாடியது அந்த அமைப்பு. 11.4.2016 அன்று தடையை நீக்கியது உச்ச நீதிமன்றம். இதன்பிறகு 24.5.2016 அன்று 'நீட்' தேர்வை நடத்துவதற்கான அவசரச் சட்டத்தை பா.ஜ.க. அரசு கொண்டு வந்தது. அப்போதும் தலைவர் கலைஞர் அவர்கள் கடுமையான எதிர்ப்பை பதிவு செய்தார்கள். இதெல்லாம் பழனிசாமிக்குத் தெரியுமா?

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு பழனிசாமி ஆட்சியில் தான் 'நீட்' தேர்வு தமிழ்நாட்டில் தொடங்கியது. அதை அவரது சாதனையாகச் சொல்லிக் கொள்ளட்டும். கவலையில்லை.

'நீட்' தேர்வை தமிழ்நாடு மட்டும் தொடக்கத்தில் இருந்து எதிர்த்து வந்தது. 'தமிழ்நாடு மட்டும்தான் எதிர்க்கிறது' என்று சொல்லி வந்தார்கள் நீட் ஆதரவாளர்கள். ஆனால் இம்முறை இந்தியாவே எதிர்க்கத் தொடங்கி இருக்கிறது. பெரும்பாலான கட்சித் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் சொல்லி வருகிறார்கள். "நடந்து முடிந்த 'நீட்' தேர்வில் மராட்டிய மாணவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். நடந்து முடிந்த தேர்வை ரத்து செய்ய வேண்டும்" என்று மகாராஷ்டிரா மாநில அமைச்சர் அசன் முஷ்ரிப் அறிக்கை வெளியிட்டுள்ளார். இது பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெறும் மாநிலம் ஆகும்.

வட மாநிலத்து இளைஞர்கள் இப்போது சமூக வலைத்தளங்களில் நீட்டுக்கு எதிராக எழுதத் தொடங்கி இருக்கிறார்கள். பிரதமரின் வாரணாசி தொகுதியில் நீட்டுக்கு மறுதேர்வு கோரி ஊர்வலம் நடந்துள்ளது. 'நீட்' எத்தகைய மோசடியான தேர்வு என்பது இன்று அகில இந்தியா முழுமைக்கும் அறிந்து விட்டார்கள். உச்சநீதிமன்றமும், தேர்வு முகமையை எச்சரித்துள்ளது.

**நீட் தேர்வில் மோசடி நடக்கிறது, சதி நடக்கிறது, முறைகேடுகள் நடக்கிறது என்பது இந்தியா ஒப்புக் கொண்ட உண்மையாகி விட்டது. இந்தச் சூழலில் 'நீட்' தேர்வு ரத்தாகும் காலம் நெருங்கி வருகிறது என்றே சொல்ல வேண்டும்.**

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீடு!

# வரவேற்போம்; வாழ்த்துவோம்!

## கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்துச் செய்தி!

கலைஞர் நூற்றாண்டு
நினைவு நாணயத்தை
ஒன்றிய அரசு
இன்று வெளியிடுகிறது
வரவேற்போம்; வாழ்த்துவோம்

காலமெல்லாம் இந்தியை எதிர்த்த
கலைஞர் நாணயத்தில் இந்தியா?
என்று சில தோழர்கள்
வினவுகிறார்கள்

அவர்களுக்கு
அன்போடு ஒருசொல்:
இந்தியப் பணத்தாளில்
இந்தியோடு தமிழும்
விளங்குவதால் அது




சமன்செய்யப்படுகிறது;
ஏற்றுக்கொள்கிறோம்

கலைஞர் நாணயத்திலும்
இந்தியோடு, 'தமிழ் வெல்லும்'
என்ற கலைஞர் கையெழுத்தும்
இடம்பிடித்திருப்பதால்

இங்கும் அது
சமன்செய்யப்பட்டுவிட்டது

வரலாற்று நிகழ்வில்
வசை எதற்கு?

களிப்புறுவோம்!

களங்கம் எதற்கு?
நிலவை ரசிப்போம்!



கவிப்பேரரசு
**வைரமுத்து**

## தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

### அணிச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, ஆக.19-

சென்னையில் தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் 26-ஆம் தேதி நடைபெறுகிறது.

இது குறித்து மாநிலச் செயலாளர் டாக்டர். அ.சுபேர் கான் அறிவிப்பு வருமாறு:-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 26-08-2024 திங்கள்கிழமை சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முப்பெரும் விழா கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர். அ. சுபேர்கான் அறிவித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி முகாம் அலுவலகத்தில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார்.

## மக்களுக்கு அதிகாரம் அளிப்பதில்

# அசைக்க முடியாத அர்ப்பணிப்பாளர் கலைஞர்!

## நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியிடுவது குறித்து ராகுல்காந்தி வாழ்த்து!

**புதுடெல்லி, ஆக.19-**

**முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா நேற்று (18.8.2024) நடைபெற்றதையொட்டி மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.**



முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களின் நூற்றாண்டில், தமிழ்நாட்டு மக்களுக்கு தனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும், அவரது வியத்தகு வாழ்க்கை மற்றும் பாரம்பரியத்தைப் போற்றும் வகையில் நினைவு நாணயம் வெளியிடப்படுவதைஅறிந்து மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களின் சமூகரீதியான முற்போக்குப் பார்வையும், மக்களுக்கு அதிகாரம் அளிப்பதில்அசைக்கமுடியாதஅர்ப்பணிப்பும் கோடிக்கணக்கானமக்கள்கண்ணியமான வாழ்க்கையை வாழ வழி வகுத்தது என்றும். அவரது உறுதியான தலைமையின் கீழ், தமிழ்நாடுஒருதிடமான இலட்சியப் பாதையில் சென்றுள்ளது என்றும், அவரது கருத்தியல்தெளிவும்மாற்றத்திற்கான அர்ப்பணிப்பும் தமிழ்நாடுபல்வேறு துறைகளில் தன்னை முன்னோடி மாநிலமாக நிலைநிறுத்திக் கொள்ள உதவியதாகவும், பல மாநிலங்கள் பெரிய கனவுகள்காணஊக்கமளித்துள்ளதாகவும்தெரிவித்துள்ளார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அசைக்க முடியாத உறுதிப்பாடு!**

இந்நிகழ்வில்,முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும் பாராட்ட விரும்புவதாகவும்,அனைத்துத்தரப்பினரையும் உள்ளடக்கிய இந்தியாவைப்பாதுகாப்பதில் அவரது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை பாராட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### வேளச்சேரி - 175வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி முருகவேலின் வார்டு மேம்பாட்டு நிதியில்

## 175வது வார்டில் நிறைவுற்ற பணிகள்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார்!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - மேயர் பிரியாராஜன் - துணை மேயர் மு.மகேஷ்குமார் - அரிமா சு.சேகர் பங்கேற்பு!

சென்னை, ஆக. 19-

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 13 வார்டு - 175 மகேஸ்வரி முருகவேல் எம்.சி. வார்டு மாமன்ற உறுப்பினரின் மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரிய 3வது அவென்யு குடியிருப்பில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் நியாய விலை கடை கட்டப்பட்டது.

கக்கன் நகரில் 30 லட்சம் மதிப்பில் நியாய விலைக் கடை கட்டப்பட்டது.

கக்கன் நகர் பிரதான சாலையில் ரூ.11 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் புதிய நிழற்குடை அமைக்கப் பட்டது.

டாக்டர் அம்பேத்கர் நகர் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் ரூபாய் 4 லட்சம் மதிப்பில் உயர் சிறிய கோபுர மின் விளக்கு அமைக்கப்பட்டது.

இவற்றின் திறப்பு விழா இன்று (19.8.2024 - திங்கள்) காலை 10.00 அளவில், மேற்படி திட்டங்கள் கட்டப்பட்ட இடங்களில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு, வார்டு உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டிடங்களைத் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் - முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி., வேளச்சேரி மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர், வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி., எஸ்.பாஸ்கரன் எம்.சி., வே.ஆனந்தம் எம்.சி., 175வது வட்டச் செயலாளர் க.பாரதிதாசன், 175 'அ' வட்டச் செயலாளர் வி.சக்திவேல் உள்பட பலரும் கலந்துகொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடி கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிடுமாறு 175வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி முருகவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தலைவர் கலைஞரின் கனவுகளை நிறைவேற்ற

# ஒன்றிணைந்து தொடர்ந்து பாடுபடுவோம்!

## ராகுல்காந்தியின் வாழ்த்துச் செய்திக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

சென்னை, ஆக.19-

"தலைவர் கலைஞர் அவர்களின் கனவுகளை நிறைவேற்ற ஒன்றிணைந்து தொடர்ந்து பாடுபடுவோம்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தியின் வாழ்த்துச் செய்திக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவையொட்டி மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் வாழ்த்துச் செய்திக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாணய வெளியீட்டு விழாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, வாழ்த்துகளைத் தெரிவித்த சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி!**

**தலைவர் கலைஞரின் கனவுகளை நிறைவேற்றத் தொடர்ந்து ஒன்றிணைந்து பாடுபடுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைத்தளத்தில் கூறியுள்ளார்.